**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**
**<u>அசல் வழக்கு எண். 116/2016</u>**
**<u>நாள் 10/11/2025 திங்கட்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – சாலமன் ராஜ்குமார் (DW1) | த/பெயர் – கோதண்டராமன் |
| வயது – 52 | தொழில் – |
| விலாசம் – | |

**<u>குறுக்கு விசாரணை–</u>**

1. வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என தெரியுமா என்றால் சொத்து அவர்களுடையது என கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளனர். எந்த சொத்திற்கு விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளனர் என்றும் எந்த சொத்திற்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டுள்ளனர் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என் தந்தை கோதண்டராமன் எப்போது இறந்தார் என்றால் நான் 3 வயது இருக்கும் போது அப்பா இறந்துவிட்டதாக என் அம்மா கூறினார். என் தந்தையின் வாரிசு சான்றிதழ் வாங்கியுள்ளோமா என்றால் வாங்கவில்லை. என் தாயார் எப்போது இறந்தார் என்றால் 19.04.2009 அன்று இறந்தார். அவருடைய இறப்பு சான்றிதழ் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை.

2. குடும்ப அட்டையில் பெயர் மாற்றம் செய்தேனா என்றால் செய்துள்ளேன். நான் 15.11.1973 ம் ஆண்டு பிறந்துள்ளேன் என்றால் சரிதான். நான் வாக்காளர் அடையாள அட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

நான் தாக்கல் செய்துள்ள பி.சா ஆ 2 குடும்ப அட்டை நகலில் என் தந்தை பெயர் இல்லை என்றால் சரிதான். தாயார் பெயர் சேசாபாய் உள்ளது. என் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் உடன்பிறந்தவர்கள் யாரும் இல்லை. 1ம் வாதி ஸ்டான்லி என்பவர் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. 4ம் வாதி சந்திரா என்பவரும் இறந்துவிட்டார் என்றால் சரிதான். செல்வகனி என்பவர் என் மனைவி ஆவார்.

3. பி.சா ஆ 2 ஆனது 2005ம் ஆண்டு வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நபர்கள் இறந்தபின்னர் குடும்ப அட்டையில் திருத்தம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது ஸ்மார்ட் கார்ட் வழங்கப்பட்டுள்ளது. ஸ்மாட் கார்டில் யார் யார் பெயர் உள்ளது என்றால் என் பெயர், என் மனைவி பெயர் மற்றும் என்னுடைய இரு மகன்களின் பெயர்கள் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பி.சா ஆ 4 பாஸ்போட் ஆனது எப்போது வழங்கப்பட்டது என்றால் 1992ம் வருடம் வழங்கப்பட்டதாகும். மேற்படி பாஸ்போட்டை நான் புதுப்பிக்கவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.சா ஆ 1 கிரைய பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சந்தான கிருஷ்ணன் குமாரர் உதயகுமார் என்பவர் யார் என்றால் தெரியாது. அதில் கூறப்பட்டுள்ள விக்டோரியாக பாபா பாய் என்பவர் யார் என்றால் என் பாட்டி ஆவார். ஷிலா மற்றும் சந்திரா (எ) சந்திர குமார் என் பெரியம்மாகள் ஆவார். சேசா பாய் என் அம்மா ஆவார்.

4. என் தாயாருடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் மேற்கூறிய 2 நபர்கள் ஆவார்கள். பி.சா ஆ 1 கிரைய பத்திரம் எந்த சொத்திற்குண்டானது என்றால் திருவள்ளுவர் நகர், எருக்கஞ்சேரியில் உள்ள என் பாட்டியின் சொத்திற்கான கிரைய பத்திரம் ஆகும். என் பாட்டியின் சொத்தை பி.சா ஆ 1 மூலம் கிரையம் செய்யப்பட்டுள்ளது

என்றால் சரிதான். அந்த சொத்திற்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து மொத்தமாக எனக்கு கொடுப்பதாக கூறினார்கள். மேற்படி சொத்தை விற்பனை செய்யும் போது எனக்கு 30 வயது என்றால் சரிதான். அந்த சொத்தை விற்பனை செய்யும் போது நான் சார்பதிவாளர் அலுவலகம் செல்லவில்லை என்றால் சரிதான். என்னை அழைக்கவில்லை. நான் செல்லாததால் மேற்படி சொத்து எவ்வளவு தொகைக்கு விற்பனை செய்யப்பட்டது அவர்களுக்குள் ஏற்பட்ட ஒப்பந்தம் பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

5. வழக்கு சொத்தின் கிரைய பத்திரம் யார் பெயரில் உள்ளது என்றால் 1ம் வாதி ஸ்டான்லி பெயரில் உள்ளது. ஸ்டான்லியின் மனைவி பெயர் சந்திர குமாரி ஆகும். அவர் என்ன வேலை செய்தார் என்றால் போக்குவரத்து துறையில் வேலைபார்த்தார். அவர் வேலையில் இருந்து எப்போது ஓய்வு பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. அவரின் மனைவி என்ன வேலை செய்தார் என்றால் ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார். வழக்கு சொத்து என் பெயரில் கிரையம் பெறவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் கிரைய பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் வாதி ஸ்டான்லி பெயரில் தான் உள்ளது. வழக்கு சொத்தை பொருட்டு 1ம் வாதி 2 மற்றும் 3 வாதிகள் பெயரில் செட்டில் மெண்ட் ஏற்படுத்தியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரம் வழக்கில் சொல்லப்பட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியாது.

6. வா.சா ஆ 4 மூலம் 09.02.2016ம் தேதியன்று மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி

எனக்கு தெரியாது. வழக்கு சொத்து எனக்கு சொந்தம் என கோரி பதிலுரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் வாதிகள் அனுப்பிய அறிவிப்புக்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். 4ம் வாதி என் அம்மாவின் சகோதரி என்பதால் என் தந்தை இறந்தபின்னர் வழக்கு சொத்தின் ஒரு பகுதியில் எங்களை குடியிருக்க அனுமதித்தார் என்றால் சரிதான். வா.சா ஆ 7 நான் அனுப்பிய பதிலுரையில் சொல்லியுள்ள விவரங்கள் தவறானது என்றால் சரியல்ல.

7. வா.சா ஆ 9 வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள கதவு எண் 2ல் நாங்கள் குடியிருக்கிறோம் என்றால் சரிதான். மேற்படி சொத்திற்கு வீட்டு வரி யார் செலுத்திவருகிறார்கள் என்றால் நான் செலுத்தவில்லை. அந்த வீட்டில் எத்தனை மாடிகள் உள்ளது என்றால் 2 மாடிகள் உள்ளன. பட்டா வழங்குவதற்கு முன்னர் வருவாய் துறையினர் சொத்தை அளந்தனர் என்றால் சரிதான். வா.சா ஆ 1 பட்டா 1ம் வாதி பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அசல் வழக்கு எண் 71/2016 என்ற வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அது மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. 1ம் வாதிதான் என் பாட்டியின் சொத்தை கிரையம் செய்ய தூண்டினார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் அம்மாவை நான் அந்த கிரைய பத்திரத்தில் கையொப்பம் செய்யவேண்டாம் என அறிவுறுத்தவில்லை என்றால் 1998ம் ஆண்டில் இருந்து என் அம்மா படுத்த படுக்கையாக இருந்தார். என் பெரியம்மா சந்திரா (4ம் வாதி) என் அம்மாவை அவருடைய வீட்டிற்கு அழைத்து செல்வதாக கூறினார், அதன் பின்னர் கிரையம் செய்துள்ளனர்,

நான் கேட்டதற்கு அந்த இடத்தை விற்பனை செய்துவிட்டு வழக்கு சொத்தை எனக்கு கொடுப்பதாக கூறினார். என் அம்மாவிற்கு என் பாட்டி சொத்தை விற்பனை செய்ததின் மூலம் வந்த தொகையை கொடுக்காமல் ஏமாற்றிவிட்டனர் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை.

8. என் பிரமாண வாக்குமூலத்தின் 6ம் பத்தியில் 1ம் வாதி உறுதியளித்தாக கூறியுள்ளேன் என்றும் யார் முன்னிலையில் உறுதியளித்தார் என்றால் நானும் என் அம்மாவும் இருந்த போது உறுதியளித்தார். எனக்கு சுற்றுவட்டாரத்தில் தெரிந்த நபர்கள் உள்ளனர் என்றால் சரிதான். அதனால் என்னை கொலை செய்ய முயற்சி செய்தார்கள் என சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல, இரும்பு கம்பியுடன் ஆட்களை அழைத்து வந்து மிரட்டினார்கள்.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**